## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(24.08.2022 முதல் 28.08.2022)

**அறிக்கை எண்: 67/2022** **தேதி: 23.08.2022**

### அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 °செ முதல் 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (24.08.2022 முதல் 28.08.2022)

| கடந்த வார வானிலை (19.08.2022 முதல் 22.08.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (24.08.2022 முதல் 28.08.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 19/08 | நாள்-2 20/08 | நாள்-3 21/08 | நாள்-4 22/08 | தேதி | நாள்-1 24/08 | நாள்-2 25/08 | நாள்-3 26/08 | நாள்-4 27/08 | நாள்-5 28/08 |
| 15.8 | 3.3 | 0.0 | 2.7 | மழை (மி.மீ.) | 26 | 7 | 7 | 26 | 4 |
| 36 | 36 | 35 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 34 | 35 | 35 | 34 |
| 26 | 27 | 26 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 25 | 25 | 25 |
| 6 | 7 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 80-55 | 74-56 | 69-44 | 70-50 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-40 | 70-40 | 70-40 | 70-40 | 70-40 |
| 11 | 18 | 17 | 31 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 10 | 4 | 6 | 6 |
| மேற்கு வட மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 24.08.2022 முதல் 28.08.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 36 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் மிதமானது முதல் கன மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும் |
| நெல் | அறுவடை | எதிர் வரும் நாட்களில் மிதமானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் மழைக்கு முன்பாக அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்யவும். |
| நெல் | நாற்றாங்கால் | தற்போது சம்பா நடவுவிற்க்கு தயாராக இருக்கும் நாற்றாங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைத்து நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும். |
| நெல் | நடவு வயல் | வரும் நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் நடவு வயலை தயார் செய்யவும் |
| வாழை | | வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

நெல் நாற்றாங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைத்து நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும்.

**இயக்குநர்**